உ

சிவமயம்

# திலக ஒளி



மலர்வு
11-02-1941

உதிர்வு
14-02-2022

முத்தவிநாயகர் கோவிலடியை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி. பாலசுந்தரம் திலகமணி (பூமணி)

அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த

## நினைவு மலர்

16-03-2022

*In memory of*

Late Mrs. Balasundaram Thilakamani

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
11.02.1941

அமரர்

உதிர்வு
14.02.2022

# திருமதி. பாலசுந்தரம் திலகமணி (பூமணி)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுயர் பிலவ  வருடம் மாசி மாதம் தனில்
பூண்ட பூர்வபக்க திரயோதசியில் போயணைந்தார் - மாண்புறு
நீண்டபுகழ் நல்லாசாள் பாலசுந்தரம் திலகமணி
பொன்னடி சேர்ந்தார் குறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியேநீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா.

அல்லல்போம்; வல்வினைபோம்; அன்னைவயிற்றில் பிறந்த
தொல்லைபோம்; போகாத் துயரம்போம் - நல்ல
குணமதிக மாமருனைக் கோபுரத்தில் மேவு
செல்வக் கணபதியைக் கைதொழுதக் கால்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

மங்கலத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா!
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினனே!
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச் சம்கரிக்கும்
எங்கள்குல விடிவிளக்கே எழில்மணியே கணபதியே!

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத மொழியார்
 அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
 சிற்றம்பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
 புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
 விகிர்தன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
 எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
 மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
 மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## அபிராமி அந்தாதி

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வருசோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே.

## கந்தபுராணம் (வாழ்த்து)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன் திருவாசகம் என்னும் தேன்.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் அருளியது – தற்சிறப்புப் பாயிரம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நு ணுக்கரிய நு ண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நு ண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை அம்மன் மங்கள ஆராத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெயவென தினம் பாடி பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய –அம்மம்மா
தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெமை – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரம் அருள்வாய் –அம்மம்மா
ஈஸ்வரி வரம் அருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் – அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுடன் அடைக்கலம் நாம் – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து –ஞான
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி (ஜெய ஜெய ஜெய சக்தி – ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை

சித்தாந்தரத்தினம் கலாநிதி க. கணேசலிங்கம்

முருகன் அருள் பெற்ற பெரும் அருளாளர் அருணகிரிநாதர். முருகனைப் போற்றி அவர் பாடிய பாடல்கள் பல. அவை கொண்ட நூல்களும் திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் என்று பல உள்ளன.

இந்த நூல்களில் கந்தரனுபூதி தனித்தன்மை கொண்டது. கந்தனின் முழு அருளுக்கும் பாத்திரமான நிலையில் அருணகிரிநாதரால் அருளிச் செய்யப்பட்ட நூல் கந்தரனுபூதி. இதன் பெருமையையும் தனித்துவத்தையும் விளக்குவதாக தாயுமானவரின் பின்வரும் பாடல் உள்ளது.

'கந்தரனு பூதி பெற்றுக் கந்தரனு பூதி சொன்ன எந்தை அருள்நாடி இருக்கும்நாள் எந்நாளோ'

பூதி என்றால் செல்வம். இங்கே இது மெஞ்ஞானம் எனும் செல்வத்தைக் குறிக்கிறது. அனுபூதி என்பது அனுபவ ஞானம். அருணகிரிநாதர் கந்தப் பெருமானின் அருள் பெற்று மெஞ்ஞான முதிர்ச்சியடைந்தவர். இதனை இப்பாடலிலே தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

கந்தனின் அருள் பெற்றபின் அருளப்பட்ட கந்தரனுபூதியிலே அவனுக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை என்று சொல்லப்படுகிறது. 'பெம்மான் முருகன் பிறவான் இறவான்' என்பது குறித்த பாடல் வரி. தாயின் வயிற்றில் பிறந்தவன் கடவுளாகமாட்டான், பிறந்து இறப்பவனும் கடவுளாகமாட்டான். இது சைவ சமயத்தின் கடவுட்கொள்கை.

சமணம் தழுவிய தமிழ் நூலாகிய சிலப்பதிகாரம் சிவபெருமானை 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று போற்றுகிறது. பல கடவுளரைப் போற்றிய தமிழ் நிலத்தில் சிவன் 'பெரிய கடவுள்' என்றும் 'பெரியோன்' என்றும் போற்றப்பட்டான். அவனின் திருவுடம்பு பிறப்பினால் வந்த உடம்பல்ல. அது உலகில் பிறவாத திருமேனி. இது போன்றதே முருகபிரானின் திருமேனியும். முருகனாக வந்தவன் சிவனே என்பது மெஞ்ஞானிகள் உணர்த்தும் உண்மை.

சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அவை தற்புருடம், அகோரம், சத்தியோசாதம், வாமதேவம், ஈசானம் என்பன. இதனால் அவனை ஐம்முகச்சிவன் என்றும் அழைப்பதுண்டு. 'ஐந்து முகர் தந்த முருகேச நம' என்று கந்தபுராணம் முருகனைப் போற்றி, அவன் சிவனின் மைந்தன் என்று உணர்த்துகிறது.

ஐந்து முகத்தோடு அதோமுகம் என்றும் ஒரு முகம் சிவனுக்கு உண்டு. வரலாற்றில் இரண்டு முறை இது வெளிப்பட்டது. தட்சனின் யாகம் செய்த பொழுதும் திருப்பாற்கடலைக் கடைந்த பொழுதும் வெளிப்பட்டதென்பர்.

ஈசனின் ஐந்து முகமும் ஆறாவது முகமாகிய அதோமுகமும் சேர்ந்து வந்தவன் முருகன். இதனை, 'ஐந்து முகத்தோடு அதோமுகமும் தந்து திருமுகங்கள் ஆறாகி' வந்தவனே முருகன் என்று கந்தர் கலிவெண்பா விளக்குகிறது. எனவே சிவனும் முருகனும் வெவ்வேறானவர் அல்ல என்பதை உணரவேண்டும்.

பிறப்பு இறப்பு இல்லாதவன் முருகன் என்று சொல்லும் அருணகிரிநார் அவனைத் திருடன் என்று முதலில் அறிமுகம் செய்கிறார். 'செம்மான் மகளைத் திருடும் திருடன்' என்பது அவரின் வார்த்தை. வள்ளியம்மையை திருட்டுத் தனமாக மணந்தவன் முருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானின் வயிற்றில் ஒரு பெண் குழந்தை பிறந்து, வள்ளிக் கிடங்கிலே, வள்ளிக் கொடிகளால் சுற்றப்பட்டுக் கிடந்தது. வேடர் தலைவனான நம்பி என்பவன் அதனைக் கண்டெடுத்து வளர்த்து வந்தான். மான்வயிற்றில் பிறந்ததால் அதற்கு மான்மகள் என்ற பெயர் வந்தது. வள்ளிக் கொடிகளுகிகிடையில் கிடந்ததால் வள்ளி என்றும் ஒரு பெயர் வந்தது. இந்தக் குழந்தை வளர்ந்து பக்குவம் எய்தியதும் தினைப்புனம் காக்கும் தொழிலில் ஈடுபட்டது.

வள்ளியின் வனப்பைக் கேள்வியுற்ற முருகன் அவளை அடைந்து திருமணம் செய்ய பல வழிகளில் முயன்றான். இறுதியில் தனது தமையன் விநாயகனின் துணையோடு அவளைத் திருட்டுத்தனமாக திருமணஞ் செய்தான். இதனால் முருகனுக்குப் பெண்திருடன் என்ற பெயர் நிலைத்துவிட்டது. இது புராணக் கதை.

சில உண்மைகளை உணர்த்த வந்தவைகள் புராணக் கதைகள். அவை உணர்த்தும் உண்மைப் பொருள் அல்லது கருத்து முக்கியமானது. மேற்கண்ட கதையில் வரும் வள்ளி பக்குவப்பட்ட, மலம் நீங்கிய, உயிர். இறைவன் பக்குவப்பட்ட உயிரைத் தேடி ஆட்கொள்வான். இதனை இக்கதை உணர்த்துகிறது.

இறைவனின் சக்தி அல்லது ஆற்றலை மூன்றாகச் சொல்வதுண்டு. இச்சை, ஞானம், கிரியை என்பவையே அவை. இச்சை என்பது ஒன்றை அடைய வேண்டும் அல்லது பெற வேண்டும் என்னும் ஆசை அல்லது உந்துதல். ஞானம் என்பது அறிவு. கிரியை என்பது செயல். வள்ளி முருகனின் இச்சா சக்தி. வேல் அவனது ஞானசக்தி. தேவயானை அவனின் கிரியா சக்தி.

இச்சக்திகளைக் கொண்ட முருகன் அருணகிரிநாதருக்கு உபதேசம் செய்கிறான். 'சும்மா இரு, சொல்லற' என்பது அவனின் உபதேச மந்திரம். சும்மா இருத்தல் என்பது வழமையாகச் செய்வது எதையும் செய்யாது இருத்தல். சொல்லற இருத்தல் என்பது உலகத் தொடர்பின்றி இருத்தல்.

அமைதியின்றி அலைபாயும் மனத்துடன் உழலும் ஒருவனுக்கு குரு அல்லது கடவுள் ஒரு வார்த்தை சொல்கிறார். அது மந்திரமாகி அவனுக்கு ஒரு மாற்றத்தை உண்டு பண்ணுகிறது. வாழ்வில் ஒரு திருப்புமுனையை உண்டாக்குகிறது. இத்தகைய ஒரு நிலை அருணகிரிநாதருக்கு உண்டாகிறது. அந்த நிலையில் அவரால், முருகபிரானைத் தவிர, வேறொன்றையும் அறிய முடியவில்லை. 'அம்மா, பொருளொன்றும் அறிந்திலனே' என்று சொல்கிறார்.

பக்குவமடைந்த ஆன்மாவை இறைவன் தானாக வந்து ஆட்கொள்கிறான் என்றும், அவனுக்கு பிறப்பு, இறப்பு இல்லை என்றும், அவன் தரும் மந்திரத்தால் உலகியல் நாட்டம் நீங்கி இறையியல் நாட்டம் உண்டாகும் என்றும் அவரின் பாடல் உணர்த்துகிறது.

'செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் அறஎன் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே'.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

நமக்குத் தீமை செய்தவரைத் தண்டிக்கும் வழி, அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மையைச் செய்து அவர் செய்த தீமையையும், நாம் செய்த நன்மையையும் மறந்துவிடுவதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு...

அம்மா மகள் நானுனக்கு
பேனா மை எடுத்து புனையும் என் கவியை
ஏற்பாய்தான் - ஆனாலோ என் ஆசை
நீ தந்த உதிரத்தில், உயிர் தாங்கி வாழும் நான்
அவ் உதிரத்தை மையாக்கி -வடிக்க வேண்டும்
கவி ஒன்று.
ஈர் பதினைந்து ஆண்டுகளாய்
உன் பக்கத்தில் நாமில்லை - இத்தனை இடைவெளிக்குள்
நாம்பட்ட இன்னல்கள் எத்தனை - ஆனாலும்
எள்ளளவும் வருத்தமில்லை எம்மீது - மாறாய்
எந்நாளும் எம்மீது அக்கறையே,
பேறுகளில் பல பேறுண்டு - ஆனால்
நாம் பெற்று வந்த பேறோ
அம்மாவாய் நாம் உனை அடைந்ததுவே.
நாம் சேயாய் இருந்தவேளை நாம் அழுவது ஏனென்று
ஆவன செய்திடுவாய் - இன்று நாம் ஆளாகி விட்டோம்
இப்போதோ இரு சேய்களின் தாய் நான்
ஆனாலும் அன்று போல் என்றும் மாறாது நீ.
இத்தனைக்கும் உடன்பிறந்தோர்க்கும் பாசத்தால் போட்டி
யார்க்கு அம்மா நீ என்று
ஆனாலும் நீ சாமர்த்தியசாலி சமநில் தராசாக.
எப்போதும் நீ உதாரணமே
பூரிக்கின்றது உள்ளம் உன் வயிற்றினில் பிறந்ததிற்காய்
ஆனாலும் அருகிருந்து சேவை ஒன்றும் செய்யலையே
என்று குறுகுறுக்கின்றது என் இதயம்
ஆனாலும் அவ் ஆண்டவனும் சாய்த்தானோ செவிதனையே
சற்றும் நீ நோகாமல் அழைத்திட்டான் தன்னருகே
இன்று உயிரோடு நீ இல்லை என்று நாம் அழுதாலும்
சற்று ஆறுதலே - பாயினிலே கடைசிவரை
படுத்த படுக்கையாகி படுப்பதனை காட்டிலும்
பிரிந்தது உன் ஆவி என்று சற்று
ஆறுதலே நமக்கெல்லாம்.
நிறைவாக உன் ஆத்மா சாந்தி பெற
வேண்டுகின்றோம் அவ் ஆண்டவனையே

மகள் நிர்மலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சகாப்தத்தின் பயணம்...

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

எதனை எழுதுவது? எங்கிருந்து தொடங்குவது? என்ற வினாக்களுக்கு விடைகாண முடியாமல், அம்மா தொடர்பான நினைவுகள் நீட்சியடைகின்றன. மரணத்திற்குப் பின்னும் வாழும் ஒரு மானுடப் பிறப்பாக அந்த நினைவுகள் அம்மாவை அலங்கரிக்கின்றன. பல்பரிமாணங்களுடன் வாழ்ந்த அம்மாவின் முழுமையான வரலாறு காலம் இட்ட கட்டளையால் இந்த கல்வெட்டில் பதியப்பட முடியாத நிர்ப்பந்தம். இருப்பினும் இயலுமானவற்றை இயம்புகின்றேன்.

மாணிக்கம் இலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வி திலகமணி. உறவினர் ஊரவர் பார்வையில் அம்மா பிறந்த பொழுது பூப் போல திகழ்ந்ததால், அம்மாவை எல்லோரும் பூமணியென வாஞ்சையுடன் அழைக்கத் தொடங்கினார்கள் என்று என் குடும்பமும் உறவினரும் சொல்லி அறிந்தேன். அம்மாவின் கரம் பற்றிய ஆனந்தம் என்று அன்போடு அழைக்கப்பட்ட அப்பா பாலசுந்தரமும் அம்மாவை பூமணியாகவும் திலகமணியாகவும் அழைக்கத் தவறவில்லை.

தன் அன்னை மீது பற்று அதிகமென்றாலும், தந்தையின் பாதையையே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அம்மா தொடர்ந்தார். தமிழ் மொழி, சைவ சமயம், தமிழர் பண்பாடு, சமூக அக்கறை, அரசியல் விழிப்புணர்வு, போன்றவை அவற்றில் முதன்மையானவை. தன் இனத்தின் மீதும், மண்ணின் மீதும் பெரும் பற்றும், தன் மதத்தின் மீது அதீத நம்பிக்கையும் கொண்டிருந்த அம்மா பிற இனங்களையும் மதங்களையும் பெரும் மதிப்புடன் அணுகினார். அநீதிகளை கண்டு ஆத்திரம் அடைந்த போதும் இந்த சித்தாந்தத்தில் அம்மா மாற்றமடையவில்லை.

பெண்கள் என்றால் அடுப்படியில் என்ற கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல, தனது பதினெட்டாவது வயதில் தமிழ் அரசியல் போராட்டத்தில் அடியெடுத்து வைத்தார் அம்மா. 1961ம் ஆண்டு சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தபோது கண்ணீர்ப் புகை தாக்குதலுக்கு இலக்கானார். தமிழர் உரிமைக்கான அவரது அரசியல் வேட்கை அவரது இறுதிக் காலப்பகுதிவரை உறுதியுடனிருந்தது.

ஒரு புறம் செல்வச்சந்நிதி தொடக்கம் வல்லிபுர ஆழ்வார் வரை அன்னதானம் வழங்கிய அம்மா, மறுபுறம் எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கினார். நெருக்கடியான காலகட்டங்களிலும் இதனைத் தொடர்ந்தார். படிப்பு மட்டுமே என்றிருந்த சமூகத்தில் விளையாட்டையும் ஊக்கப்படுத்தினார். இருப்பினும், விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சமம் என அறிவுரை சொன்னதை விட, வெற்றிபெறுவதையே குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்ற எண்ணங்களையே உருவாக்கினார்.

அம்மா சமைத்த உணவை உண்டு பலவருடங்கள் ஆனபோதும், உலகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பாகத்தில் வாழ்ந்தாலும் இன்றும் அம்மாவின் உணவின் சுவையை மெச்சுபவர்கள் பலருள்ளார்கள். நான் அறிந்தவரை, ஊரில் உள்ள பலர் அறிந்தவரை, குறைந்தது ஊரிலுள்ள ஒருவருக்காவது ஒவ்வொரு நாளும் உணவு வழங்கும் பழகத்தை தனது இறுதி நாள்வரை அம்மா கைக்கொண்டார்.

தனது உறவினர்களுடனும் சரி, காலம் உறவுகளாய் உருவாக்கியவர்களுடனும் சரி அன்புடனும் உரிமையுடனும் பழகினார். போர் எமது கூட்டை கலைத்த போதும், தருணம் கைகூடும் போதெல்லாம் குருவிகள் அந்த கூட்டை நோக்கி பயணிக்க அம்மாவின் அன்பும் அரவணைப்பும் பெரும் காரணம். ஏழையவருக்கு உதவி செய்ய தயங்காத அம்மா, தனக்கு பிழையென படும் விடயங்களில் கோபத்தின் உச்சம் வரை செல்வார். அவரிடம் நிறைந்திருந்த பாசமும் பரிவும் அவர் கொள்ளும் கோபத்தின் ஆயுளை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சுருக்கிவிடும். ஆயினும், அடக்குமுறையைப் பார்த்து அவர்விட்ட கண்ணீரும் கோபமும் இறுதிவரை மறையவில்லை.

தமிழர்களுடைய வரலாற்றில் மிக முக்கியமான பல நிகழ்வுகளின் சாட்சியாக, பங்குபற்றுனராக இருந்த அம்மாவின் பயணம், ஒரு வரலாற்று கையளிப்பினூடாகத் தொடர்கிறது. சவால் மிகுந்த காலகட்டங்களில் உறுதியின் அடையாளமாகத் திகழ்ந்த அம்மா, தான் நேசித்த உறவுகளை இருள் சூழும் காலங்களில் ஒளியேற்றி வழிகாட்டுவாராக.

மகன் நிர்மானுசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடன்பிறப்புகள் கமலாம்பிகை, விமலாம்பிகை, தில்லைநாதன், மருமகன் சற்குணராசா, சுஜீந்திரன், மதுரங்கன், மைத்துனர் ஜெயபாலசிங்கம், மைத்துனி ஜெயலட்சுமி, மருமகள் சாம்பவி, பேரப்பிள்ளைகள் துசாந், நிசாலினி, தெர்சன், ஓவியா, இளங்கோ, நற்றவன், நேரியன், பெறாமக்கள் கஜேன், கௌசி, அபிராமி, பூட்டப்பிள்ளைகள் டெவின், அர்வின், அமிலா, நீஉன் ஆகியோரின் இரங்கல்.**

முறைகள் பலவாயினும் தலைமுறையினை காத்து
உறவுகள் செழிக்க ஒளியினை தந்த உத்தமியே!
முத்தமிழும் வரலாறும் முடிசூடி,
எத்திசை சென்றாலும் ஆணிவேர் பலமாயிருக்க
அடித்தளமாய் நீயிருந்தாய்
நெருக்கடிகள் வந்த போதும் நெஞ்சு நிமிர்த்தி நீ நடந்தாய்
அஞ்சற்க என்ற வாசகத்தை இதயத்தில் நீ வரிந்தாய்
ஆபத்தில் நாமிருந்தால் காப்பாற்ற நீ வருவாய்
அறிவினையும் உறவினையும் நீ வளர்த்தாய்
அந்தரித்தோரை அரவணைத்தாய்
மானுடத்தையும் இயற்கையையும் நேசித்தாய்
தாயக காற்றை சுவாசித்தே
என்னுடல் போகவேண்டுமென அடம்பிடித்தாய்
பிள்ளையார் மணியோசை செவியில் வீழ்வதே
வாழ்வதற்கு வலுச்சேர்க்குமென வர்ணித்தாய்
அடிமை வாழ்வின் விலங்குடையென்றாய்
கொடுமைகள் கண்டால் கோபம் கொண்டாய்
எம் அகவை தினங்களை நாம் மறந்தாலும்
உன் இறை அர்ச்சனை மூலம் எம்மில் இணைந்தாய்
காலனை பலதடவை எட்டி உதைத்தாய்
பாலகர்களுக்கு எப்போதும் பாசம் பொழிந்தாய்
தூரதேசம் நாம் சென்ற போதும்
எமக்கெல்லாம் நேசத்தால் பாலம் அமைத்தாய்
வாசற் கதவைத் திறந்து வாஞ்சையுடன் எமையழைத்தாய்
வழியேதுமில்லை என்றபோது நம்பிக்கையாய் நீயிருந்தாய்
எமக்காய் இனி யாரிருப்பார்? எமக்காய் இனி யார் வருவார்?
அரவணைக்க யாருமற்று அந்தரித்து போய்விடுவமோயென்ற
சஞ்சலமடையும் மனதை ஆற்றுப்படுத்தும் வழிகளின்றி
தோற்றுப் போகும் சூழலிலெல்லாம் எமக்காக நீ தோன்றுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியார் கவிதைகள்

## அச்சமில்லை அச்சமில்லை

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்டே பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

## மனதில் உறுதி வேண்டும்

மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்,
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்,
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்,
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.

கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்.

## அக்னி குஞ்சொன்று கண்டேன்

அக்னி குஞ்சொன்று கண்டேன்
அக்னி குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரதிற்குஞ்சென்று மூப்பென்றுமுண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழடி – வரலாற்றின் ரகசியம்!

அ.முத்துக்கிருஷ்ணன் (நன்றி: விகடன்)

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை 2013–14 ஆம் ஆண்டில் வைகை நதிக்கரையில் ஓர் ஆய்வை மேற்கொண்டது. வெள்ளிமலையில் தொடங்கி தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களின் வழியே 250 கி.மீ தூரம் ஓடும் வைகை நதியின் இருகரைகளிலும் உள்ள 400 கிராமங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஓர் ஆண்டு முழுவதும் இந்த 400 கிராமங்களில் அலைந்து திரிந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அவர்கள் 263 புதை மேடுகளையும் 90 வாழ்விடங்களையும் இனம் கண்டார்கள்.

அதில் வாழ்விடங்களான கீழடி, மாரநாடு, சித்தர் நத்தம், டொம்பச்சேரி, அல்லிநகரம், ராஜகம்பீரம், பாண்டிக்கண்மாய், அரசநகரி ஆகிய இடங்களைப் பரிசீலித்து அதில் கீழடி, மாரநாடு, சித்தர் நத்தம் ஆகிய மூன்று கிராமங்களைத் தங்களின் அடுத்த கட்ட ஆய்விற்கு இந்தக் குழுவினர் தேர்வு செய்தனர்.

கீழடி – கொந்தகை ஆகிய இரு கிராமங்கள் 13–ம் நூற்றாண்டில் குந்திதேவி சதுர்வேதி மங்கலம் என்கிற பெயரால் அழைக்கப்பட்டது. சதுர்வேதி மங்கலத்தின் கிழக்கு முனைதான் கீழடி என்று இன்று அழைக்கப்படுகிறது. பின்னாள்களில் சதுர்வேதி மங்கலம் என்கிற வார்த்தை மருவி கொந்தகையாக மாறியது. கீழடி, கொந்தகை, மணலூர் ஆகிய மூன்று கிராமங்களின் எல்லைகளுள் ஒரு தொல்லியல் மேடு இருப்பதைக் குழுவினர் கண்டறிந்தனர். இந்தத் தொல்லியல் மேட்டின் பெயர்தான் பள்ளிச்சந்தைத் திடல். இந்தப் பள்ளிச்சந்தைத் திடலைத்தான் தங்களின் ஆய்வுக் களமாக முடிவு செய்து இங்கே அகழாய்வை மேற்கொள்ள இந்தியத் தொல்லியல் துறை முடிவு செய்தது.

கடந்த இரு நூற்றாண்டுகளாக வைகை நதிப்பகுதிகளில் பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 1888–ல் பரவை, அனுப்பானடி, துவரிமான் பகுதிகள், 1976–ல் தே.கல்லுப்பட்டி, 1980–ல் கோவலன் பொட்டல், 1986–ல் அழகன்குளம், 2007–ல் மாங்குளம் என இந்த அகழாய்வுகளின் வழியே மிக முக்கியக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 2006–ல் முனைவர் கா.ராஜன் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் வழியேதான் நமக்கு புலிமான்கொம்பை, தாதப்பட்டி நடுகற்கள் கிடைத்தன.

கீழடியில் அகழாய்வுக் குழிகளில் 1.5 மீட்டர் ஆழத்தில் களி மண்ணும் அதற்குக் கீழ் 4.5 மீட்டர் ஆழம் வரை மணலும் இருக்கின்றன. இந்த மணல் வைகை ஆறு இங்கே பாய்ந்ததற்கான சான்றாகவும் பின்னர் ஆறு தனது பாதையை மாற்றியிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகிறது. கீழடி மற்றும் அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அகழாய்வு நிபுணர்களின் மேற்பார்வையில் புதைந்திருக்கும் அரிய பொக்கிஷங்களைக் கண்டெடுத்தார்கள். மூன்று ஆண்டுகள் இந்தியத் தொல்லியல் துறையும் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையும் தொடர்ச்சியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழடியில் அகழாய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

கீழடியில் அகழாய்வுகள் தொடங்கிய நாளில் இருந்தே நமக்கு அந்த நிலம் ஆச்சரியங்களை வழங்கியபடி இருக்கிறது. அங்கு கிடைத்த பொருள்களை வைத்து அங்கு வாழ்ந்தவர்கள் ஒரு வேளாண் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதும், அவர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் தெளிவுபடக் கூறலாம். அவர்களின் வசிப்பிடங்களில் பாவிக்கப்பட்ட கட்டுமானப் பொருள்கள் நமக்குக் கிடைத்துள்ளன. செங்கற்கள், சுண்ணாம்பு சார்ந்த கூரை ஓடுகள், சுடுமண்ணாலான உறைகிணறுகள், இரும்பு ஆணிகள் கிடைத்துள்ளன.

கீழடியில் கிடைத்த பானைகளில் உள்ள கீறல் குறியீடுகள், தமிழி எழுத்துகள் சங்க காலத் தமிழர்களின் எழுத்தறிவை நமக்குப் பறைசாற்றுகின்றன. 'ஆதன்', 'உதிரன்', 'திசன்', 'குவிரன் ஆத(ன்)' போன்ற பெயர்களைக் குறிப்பிடும் தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகளும் கிடைத்துள்ளன. தாமிரத்தாலான கண் மை தீட்டும் குச்சி, இரும்பாலான அம்பு முனைகள், எழுத்தாணி, சுடுமண் முத்திரைக் கட்டைகள் உட்பட பல்வேறு அரிய தொல்பொருள்கள் கிடைத்துள்ளன.

அங்கு கிடைத்த சில கைவினைப் பொருள்கள், அவர்கள் கைவினைத் தொழில்களில் தேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை நிறுவுகின்றன. தக்களிகள், எலும்பினாலான கூர்முனைகள், அரவைக் கல், தந்தத்தினாலான சீப்புகள், நீள் கழுத்து நீர்க்குடுவைகள், மணி வகைகள் என ஏராளமான பொருள்கள் அவர்களின் தொழில் சார் நடவடிக்கைகளையும், கைவினைப் புலமையையும், வாழ்வியலையும் நமக்கு உணர்த்துகின்றன.

கீழடியில் வாழ்ந்த பண்டைய மக்களின் வாழ்க்கை முறையை அங்கு கிடைத்த மதிப்பான அணிகலன்களின் வழியே காண முடிகிறது. தங்கத்தினாலான தொங்கட்டான், மணி, தகடு, வளையம், கண்ணாடி மணிகள் என அழகிய அணிகலன்கள் கிடைத்துள்ளன

பண்டைய மக்களின் விளையாட்டுப் பொருள்களும் நமக்கு அகழாய்வில் கிடைத்துள்ளன. பகடைக்காய்கள், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள், தந்தத்தினாலான தாயக்கட்டை என நமக்கு அங்கு பல முக்கியச் சான்றுகள் கிடைத்துள்ளன.

அவர்கள் ரோமாபுரியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில் கீழடியில் அகேட் மற்றும் கார்னீலியன் (சூதுபவளம்), ரௌலட்ட மட்கலன்கள் கிடைத்துள்ளன. மனித சமூகத்தின் மிகத் தொன்மையான கலைவடிவமான சுடுமண் உருவங்கள், புடைப்பு உருவங்கள் அங்கு கிடைத்துள்ளன. 13 மனித உருவங்களும், 3 விலங்கு உருவங்களும் அகழாய்வில் கிடைத்துள்ளன. செம்பினால் செய்யப்பட்ட அரிய பொருள்களும் நமக்கு அங்கு கிடைத்துள்ளன.

ஒரு நகரத்திற்கு நீர் வழங்குதலும் கழிவுநீர் அகற்றலும் நாகரிக வளர்ச்சியின் முக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன. கீழடியில் சுடுமண் குழாய்களால் அமைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவுநீர்க் கால்வாய் வசதியுடன் கட்டடங்கள் இருந்தன என்று கண்டறியப்பட்டுள்ளது. மூன்று உறைகிணறுகள் வெவ்வேறு மட்டங்களில் கிடைத்துள்ளன, இதைப் பொறுத்து அந்தக் காலத்தில் இருந்த நீர் மட்டங்களின் உயரத்தைக் கணிக்க முடிகிறது. நீர் மட்டம் குறைந்ததால் அடுத்து அடுத்து இன்னும் கூடுதல் ஆழத்திற்கு உறைகிணறுகள் அமைக்கப்பட்டதா என்பதை மண் பரிசோதனைகள் மூலம் அறியலாம். அது மட்டும் அல்லாது இங்கு கிடைத்த செங்கற்கள் நான்கு அளவுகளில் கிடைத்துள்ளன. 46, 38, 36, 34 சென்டிமீட்டர் அளவுகளில் அவை இருப்பதால் இவை அனைத்தும் வெவ்வேறு காலகட்டங்களைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. சங்ககாலத்தில் கட்டடங்களே இல்லை என்கிற இதுகாறும் நிலவிவந்த நம்பிக்கையைக் கீழடி அகழாய்வு மாற்றியமைத்துள்ளது.

வரலாற்றின் தொடக்கக்காலத்தைச் சேர்ந்த கறுப்பு சிவப்பு மண்பாண்ட ஓடுகள், வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கறுப்பு சிவப்பு மண்பாண்டத் துண்டுகள், செம்பழுப்பு நிறக் கலவை பூசப்பட்ட மண்பாண்டத் துண்டுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. தமிழகத்தில் செம்பழுப்பு நிற ரசட் (சரளநவ) கலவை பூசப்பட்ட பாண்டங்கள் இதுவரை கொங்குப் பகுதியில் மட்டுமே கிடைத்திருப்பதைக் கொண்டு இப்பகுதி கொங்குப் பகுதியுடனும் வாணிபத் தொடர்பிலிருந்ததாகவும் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

கீழடியில் உள்ள கட்டடங்களின் தரைத்தளங்களும், நீண்டு செல்லும் மதில் சுவர்களும் நகர நாகரிகத்திற்கு வேண்டிய அனைத்துக் கட்டமைப்புகளையும் இந்த நகரம் கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன. 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வின் போது சேகரிக்கப்பட்ட ஆறு கரிம மாதிரிகள், அமெரிக்க நாட்டின் புளோரிடா மாகாணம் மியாமி நகரத்தில் அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டன, ஆறு கரிம மாதிரிகளின் காலம் கி.மு 6–ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு 3–ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகும். 353செ.மீ ஆழத்தில் கிடைத்த இந்தக் கரிமத்தின் காலம் கி.மு 6–ஆம் நூற்றாண்டு என்றும் 200 செ.மீ ஆழத்தில் சேகரிக்கப்பட்ட மற்றொரு கரிமத்தின் காலம் கி.மு 3–ஆம் நூற்றாண்டு என்றும் காலம் கணிக்கப்பட்டது.

கீழடி அகழாய்வில் ஆயிரக்கணக்கான பொருள்களை உறைந்த நிலையில் காலம் பாதுகாத்து நம்மிடம் வழங்கியிருக்கிறது. மதுரை உலக தமிழ்ச் சங்கத்தில் இந்தப் பொருள்களின் பெரும் கண்காட்சி நடைபெற்றது. இப்போது கீழடியில் தொல்லியல் துறையின் சார்பாகப் பெரும் அருங்காட்சியகம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. இங்கே ஒரு உலகத்தரமான தொல்லியல் அருங்காட்சியகம் மதுரையின் ஒரு மகுடமாக அமையவிருக்கிறது. இதை நாம் மட்டும் கண்டுகளித்தால் போதாது. இந்தப் பொருள்களுக்கு இனி சிறகு முளைத்து அது இந்தியாவின் பல பாகங்களுக்குப் பறக்கத் தொடங்க வேண்டிய நேரமிது. உலகப் புகழ்பெற்ற ஓவியர்களின் ஓவியங்கள் உலகம் முழுவதும் சென்று கண்காட்சிக்கு வைக்கப்படுவதுபோல் கீழடி தொடங்கி தமிழர் நாகரிகத்தின் சான்றுகள் உலகம் முழுவதும் சென்று காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நம் குழந்தைகள் இனி எத்தனை காலம்தான்
உலக அரசியல்களைப் பற்றியே பாடம்
படிப்பது, இனி அவர்கள் நம் நிலத்தில் உள்ள
அதிசயங்களைப் பற்றியும் கற்க வேண்டும்.
நம் பள்ளி கல்லூரி மாணவர்கள் இனி
வருடம்தோறும் மதுரையைச் சுற்றி உள்ள
பாறை ஓவியங்களை, கல்வெட்டுகளை,
சமணர் படுகைகளை—குகைகளை,
அகழாய்வுத் தளங்களை, புராதனச்
சின்னங்களைச் சென்று பார்க்க வேண்டும்.
நம் பண்பாட்டின், மொழியின், நாகரிகத்தின்
போற்றத்தக்க விழுமியங்களை அறிய
வேண்டும், நம் பிள்ளைகள் நாம் ஒரு
மூத்த நாகரிகத்தின் தொடர்ச்சி என்கிற
பெருமிதத்துடன் உலகம் முழுவதும் வலம் வர
வேண்டும்.
தொல்லியல் துறையில் ஆர்வம் கொண்டு
தம் வாழ்க்கையை இதற்கு அர்ப்பணித்த
நூற்றுக்கணக்கான அறிஞர்கள், ஆர்வலர்கள்
தமிழகம் எங்கும் இருக்கிறார்கள். இவர்களின்
ஒப்பற்ற உழைப்பின் வழியேதான்
கல்வெட்டுகள், நடுகற்கள் முதல்
அகழாய்வுகள் வரை எல்லாவற்றையும் இன்று
அடைந்திருக்கிறோம்.



*Male Torso*



*Horse Head*



*Relief*




*Mould of a Head*



*Head*



*Bull Head*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு"

அம்மாவின் இறுதிக் காலப்பகுதியில் அம்மாவிற்கு பல்வேறு வழிவகைகளில் உறுதுணையாக இருந்தவர்களுக்கும், அம்மா இயற்கை எய்திய செய்தியறிந்து மருத்துவமனைக்கும், வீட்டிற்கும் விரைந்த உறவுகளுக்கும், அவரது மரணச்சடங்கிற்கு உதவி புரிந்தவர்களுக்கும், வருகை தந்தவர்களுக்கும், எமது துயரில் நேரடியாகவும் தொலைபேசி ஊடகவும் பங்கெடுத்தவர்களுக்கும், அந்தியேட்டி கிரியைகளுக்கு உதவியோருக்கும், அந்தியேட்டி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்த மதிய போசனத்திலும் பங்குபற்றியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
தமிழ்ப்பூங்கா, நெல்லியடி - 0212264014